(7)

சுற்றறிக்கை இல:- 03/00

எனது இல- என்ஈபி/சிஓ/எஸ்ஈ/பி/2
கூட்டுறவுத் திணைக்களம்,
திருகோணமலை,
28.08.2000.

சகல ப.நோ.கூ.சங்கங்களினதும்
தலைவர்/செயலாளர்கட்கும்.

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் பட்டியலும் , தெரிவுகளும்.

கூட்டுறவுச் சங்கமொன்றின் உரித்தாளிகள் அச்சங்கத்தின் உறுப்பினர்களேயாவர். உறுப்பினர்களின் பங்களிப்பு இன்றிச் சங்கங்களை நடாத்த முடியாது. ஆனால் பெரும்பாலான ப.நோ.கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர் பதிவேடுகளைச் சரிவரப் பேணுவதற்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. உறுப்பினர் விண்ணப்பப்படிவம் தொடக்கம் பின்னுரித்தாளி வரையான சரியான விபரங்கள் சங்கங்களின் செயலாளர்களால் பேணப்படல் வேண்டும். உறுப்பினர்கள் தொடர்பான பிரச்சினைகள் சங்கங்களில் தேர்தல்கள் அண்மிக்கும் பொழுதுதான் அதிகரிக்கின்றன. பூரணமற்ற பட்டியல்களின் அடிப்படையில் தேர்தல்களை நடாத்தும்பொழுது அவை பின்னர் கேள்விக்குட்படுத்தப்படுகின்றன. இதனால் பெருஞ்செலவுடன் நடாத்தி முடிக்கப்பட்ட தேர்தல்களை இரத்துச் செய்வேண்டிய நிலை ஏற்படுபகிறது. கிளை முகாமையாளர் தொடக்கம் சங்கச் செயலாளர், தலைவர், வரையானோர் அக்கறையுடன் செயற்பட்டால் இவ்விதமான பிரச்சினைகள் தவிர்க்க முடியும். எனவே, இதனை கூட்டுறவுச் சங்கங்களின் துணைவிதிகள், விதிகள், சட்டங்கள் என்பவற்றுக்கமைய எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பது தொடர்பாகப் பின்வரும் அறிவுறுத்தல்கள் என்னால் வழங்கப்படுகின்றன. இவற்றைப் பின்பற்ற வேண்டியது சங்கங்களின் கடமையாகும்.

01. துணைவிதிகளில், உறுப்பினர்களை அனுமதித்தல், உறுப்பினர் பதிவேடு எனும் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை கவனமாக வாசித்து அவற்றுக்கமைய உறுப்பினர் விண்ணப்பங்களைப் பெற்று பதிவேடுகளைப் பேணவும்.

02. கிளைக்குழுக்கள் மூன்று மாதத்துக்கு ஒருமுறையாவதுகூடி உறுப்பினர் பட்டியல்களை மீளாய்வு செய்து இறந்தவர்களை நீக்கி புதியவர்களைச் சேர்த்து விபரத்தைச் சங்கச் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

03. பங்குப் பணத்துக்கான படிவம் 10 வழங்கப்படும் பொழுது குறிப்பிட்ட உறுப்பினரது பெயர், முகவரி என்பன தெளிவாக எழுதப்படல் வேண்டும். இதன் பிரதிகள் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

04. உறுப்பினர் பட்டியல் தயாரிக்கப்படும் பொழுது உறுப்பினரது முழுப்பெயர், வயது, பங்கின் பெறுமதி, முகவரி என்பன யாவும் சரிவர இடம்பெறுவதைச் சங்கச் செயலாளர் உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

05. ரூபா.100/- பெறுமதியான பங்கொன்றைச் செலுத்தி ஒரு வருடம் கழிந்த பின்னரே உறுப்பினர் ஒருவர் வாக்காளர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படல் வேண்டும்.

06. மேற்கூறியவாறு விபரங்களை உள்ளடக்கி ஒருதடவை உறுப்பினர்களது பட்டியல் தயாரிக்கப்பட்டிருப்பின் அதன் இறுதிப்பகுதியில் புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக்கொள்வதன் மூலம் உறுப்பினர் பட்டியலை எப்பொழுதும் இலகுவாக பூரணப்படுத்திக்கொள்ளலாம்.

07. 19.05.98ம் திகதிய 1028/6 இலக்க வர்த்தமானி அறிவித்தலின்படியே சகல ப.நோ.கூட்டுறவுச் சங்க கிளைக்குழுத் தேர்தல்களும் நடாத்தப்படுதல் வேண்டும். இதற்கு முன்னர் இருந்த நடைமுறை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

08. மேற்படி அறிவித்தலில் உறுப்பினர் பட்டியல் காட்சிப்படுத்தப்பட வேண்டிய காலம் பற்றி குறிப்பிடப்படாவிடினும் குறைந்தது 07 நாட்களாவது காட்சிப்படுத்தப்படுவதை உறதிசெய்து கொள்ளவும்.

09. இதன் பின்னர் வேண்டிய திருத்தங்களை மேற்கொண்டு சங்கத் தலைவரும் , செயலாளரும் ஒவ்வொரு கிளையினதும் உறுப்பினர் பதிவேட்டை உறுதிப்படுத்தி குறைந்தது தேர்தல் திகதிக்கு மூன்று மாதங்களுக்கு முன்னராவது தங்கள் பகுதி உதவி ஆணையாளருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

10. கிளைக்குழுத் தெரிவு பற்றிய விளம்பரம் பத்திரிகைகள் வாயிலாகவோ, ஒலிபெருக்கி மூலமாகவோ, பொது துண்டுப் பிரசுரங்கள் மூலமோ அல்லது எல்லா முறையிலுமோ 07 நாட்கள் முன்னறிவித்தலுடன் செய்யப்படல் வேண்டும்.

11. துணைவிதிகளில் குறிப்பிடப்படும் வழிமுறைக்கமைவான நடைமுறைகளைப் பின்பற்றி கிளைக்குழு உறுப்பினர்களை தெரிவுசெய்தல் வேண்டும். இவர்களில் ஆகக்குறைந்தது இருவராவது 18-35 வயதிற்கிடைப்பட்ட வயதையுடையவராக இருத்தல் வேண்டும். போட்டி ஏற்படும் பட்சத்தில் இவ் இருவரை தெரிவுசெய்த பின் எஞ்சிய உறுப்பினர்களை தெரிவுசெய்தல் வேண்டும். மேலே குறிப்பிட்ட வயதுடையோர் தெரிவாகாவிடின் அவ்விரு இடங்களும் வெற்றிடமாக இருத்தல் வேண்டும். குழுவில் இவ்வயதிற்கிடைப்பட்டோர் இருவருக்கு மேற்படவும் தெரிவாகலாம்.

12. புதிய துணைவிதிகளில் மகளிர் இருவர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. மகளிர்குழு முன்னராகவே அமைக்கப்பட்டிருக்காவிடின் மேற்படி தெரிவிலன்றே சமூகமளித்திருக்கும் பெண் உறுப்பினர்களிடையே இருந்து ஐவர் கொண்ட மகளிர்குழுவை அமைத்து அவர்களிலிருந்து இருவரை கிளைக்குழு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்தல் வேண்டும்.

13. கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டதும் கூட்டுறவுச் சங்கங்களின் விதி 21( IV )க்கமைய, தமது தகைமை பற்றிய உறுதியுரை ஒன்றைச் செய்தல் வேண்டும். இது உறுப்பினர்களது கடமையாகும். சங்கச் செயலாளர் இதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து கொடுத்தல் வேண்டும். (மாதிரி உறுதியுரை இத்துடன் இணைக்கப்படுகின்றது).

14. பணிப்பாளர்சபைத் தெரிவின்போது மேற்கூறப்பட்ட நடைமுறைகளே பின்பற்றப்படல் வேண்டும் என்பதை கவனத்திற்கொள்க.

ஜனநாயக முறையில் குறிப்பிட்ட காலத்துள் சங்கத் தேர்தல்களை நடாத்தி, கிளைக்குழுக்களையும் பணிப்பாளர் சபையையும் தெரிவுசெய்தல் சங்கச் செயலாளரதும், பதவியில் இருக்கும் பணிப்பாளர் சபையினதும் இன்றியமையாத கடமையாகும். இவ்விடயத்தில் சம்பளம் பெற்றுப் பதவி வகிக்கும் செயலாளர் சட்டங்களை மீறாது செயற்பட வேண்டும். மேலே குறிப்பிட்டவை யாவற்றுக்கும் பணியாளர்களும், பணிப்பாளர்களும் தனித்தும், ஒருமித்தும் பொறுப்பாகின்றனர். எனவே, என்னால் சட்டங்களைப் பிரயோகித்து உங்கள்மீது நடவடிக்கை எடுக்காத விதத்தில், குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக கூட்டுறவு அடிப்படையில் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ஆ.சுப்பிரமணியசர்மா,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும்(வகி).

பிரதி:- 01. செயலாளர்,
மாகாண பொது நிர்வாக,உள்ளூராட்சி,கூட்டுறவு.
வீதி அபிவிருத்தி,கிராமிய அபிவிருத்தி,கைத்தொழல் அமைச்சு,
வ.கி.மா, திருகோணமலை. - தகவலுக்காக.

02. கூ.அ.உ.ஆணையாளர்,
தகவலுக்கும், உரியநடவடிக்கைக்குமாக.

## கிளைக்குழு உறுப்பினர்களுக்கான உறுதியுரை.

——— ஆகிய

(முழுப் பெயர்)

நான் வரையுள்ள ——— ——— கூட்டுறவுச் சங்கத்தின் ———ஆம் இலக்க ——— ——— கிளையின் கிளைக்குழு உறுப்பினராக செயலாற்றுவதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் விதி, துணைவிதி ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட தகைமையீனங்கள் எதனையும் உடையவனல்ல என்பதை இத்தால் விசுவாசத்துடன் பிரகடனம் செய்து உறுதி செய்கின்றேன்.

ஒப்பம்
உறுப்பினர் இல.

சாட்சிகள்:-

1. ——— கையொப்பம் ——— உறு.இல. ———
(முழுப்பெயர்)

2. ——— கையொப்பம் ——— உறு.இல. ———
(முழுப்பெயர்)